## எஸ்பிஐ லைஃப் - சரள் பென்ஷன் ஏன்?

எஸ்பிஐ லைஃப் - சரள் பென்ஷன் கொண்டு ஓய்வு பெற்ற பிறகும், விட்டு விடுதலையாகி எப்போதும் நீங்கள் வாழ விரும்பிய வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்திடுங்கள். இது கொள்முதல் விலையை திரும்பத் தருவதுடன், வாழ்க்கையில் எந்த சமரசத்தையும் செய்து கொள்ளத் தேவை இல்லாமல் முறையான வருவாயை உங்களுக்கு வழங்குகிறது. இந்தத் திட்டம் ஓய்வு கால வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக வாழ்ந்திட ஒரு சில எளிய வழிமுறைகளில் பொருளாதார சுதந்திரத்தை வழங்குகிறது. எஸ்பிஐ லைஃப் - சரள் பென்ஷன் என்பது ஒரு சிங்கிள் பிரீமியம், தனிப்பட்ட, நான்-லிங்க்டு, நான்-பார்ட்டிசிபேட்டிங், உடனடி ஆண்டளிப்பு திட்டம்.

## முக்கிய சிறப்பம்சங்கள்

- தரமான உடனடி ஆண்டளிப்பு திட்டம் கொண்டு உங்கள் ஓய்வு காலத்திற்கான பாதுகாப்பு.
- கிடைக்கும் ரிடர்ன் ஆஃப் பிரீமியம் விருப்பத்தேர்வுகளிலிருந்து தேர்வு செய்வீர்: சிங்கிள் லைஃப் அல்லது ஜாயின்ட் லைஃப் ஆண்டளிப்பு.
- நிதிசார் தேவை எனின் கடன் வசதி பெற்று பயனடைய விருப்பத்தேர்வு.
- குறிப்பிடப்பட்ட முக்கிய நோய் கண்டறியப்பட்ட நிலையில் ஒப்புவிப்பு வசதி பெற்று பயனடைய விருப்பத்தேர்வு.

## தகுதி வரம்பு

| | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
|---|---|---|
| **நுழைகையில் வயது (கடந்த பிறந்த நாள் படி)** | 40 ஆண்டுகள் | 80 ஆண்டுகள் |
| **பிரீமியம்** | ஆண்டளிப்பு பட்டுவாடா வகைப் படி குறைந்தபட்ச ஆண்டளிப்பு தவணை செலுத்தப்படலாம் | குழு ஒப்புதல் வழங்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்பு படி வரம்பு இல்லை |
| **குறைந்தபட்ச ஆண்டளிப்பு பட்டுவாடா தொகை (தவணை ஒன்றுக்கு)** | மாதாந்திரம்: ₹1,000 I அரையாண்டு: ₹6,000<br>காலாண்டு: ₹3,000 I வருடாந்திரம்: ₹12,000 | குழு ஒப்புதல் வழங்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்பு படி வரம்பு இல்லை |
| **பிரீமியம் செலுத்தும் காலவரை** | சிங்கிள் பிரீமியம் | |
| **ஆண்டளிப்பு செலுத்தும் வகை** | மாதாந்திரம் அல்லது காலாண்டு அல்லது அரையாண்டு அல்லது வருடாந்திரம் | |

*மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளும் ஜாயின்ட் லைஃப் ஆண்டளிப்புகள் ஆகும் வயது வரம்பு இருவருக்கும் பொருந்தும்.

## ஆண்டளிப்பு விருப்பத்தேர்வுகள்

ஆண்டளிப்பு பட்டுவாடா ஆண்டளிப்பு பெறுபவரின் வாழ்நாள் முழுவதும் ஓர் உத்தரவாதமான விகிதத்தில் தொடரும். ஓர் ஆண்டளிப்பு பெறுபவராக, நீங்கள் பின்வரும் ஆயுள் ஆண்டளிப்பு விருப்பத்தேர்வுகளிலிருந்து தேர்வு செய்யலாம் :

1. **கொள்முதல் விலையின்** ** **வருவாய் 100%-ன் வருவாய் கொண்டு வாழ்நாள் ஆண்டளிப்பு (ஆர்ஓபீ):** ஆண்டளிப்பு பெறுபவரின் வாழ்நாள் முழுவதும் ஒரு நிலையான விகிதங்களில் ஆண்டளிப்பு நிலுவைகளில் அளிக்கத்தக்கது.
    - ஆண்டளிப்பு பெறுபவரின் இறப்பு பேரில், உடனடியாக அனைத்து எதிர்கால ஆண்டளிப்பு பட்டுவாடாக்களும் நிறுத்தப்பட்டுவிடும்.
2. **இறுதி எஞ்சுநர் இறப்பு பேரில் கொள்முதல் விலையின்** ** **வருவாய் 100%-ன் வருவாய் கொண்டு கூட்டு ஆயுள் இறுதி எஞ்சுநர் ஆண்டளிப்பு (ஆர்ஓபீ):**
    - முதன்மை ஆண்டளிப்பு பெறுபவரின் வாழ்நாள் வரை ஒரு நிலையான விகிதங்களில் ஆண்டளிப்பு நிலுவைகளில் அளிக்கத்தக்கது.
    - முதன்மை ஆண்டளிப்பு பெறுபவரின் இறப்பு பேரில், வாழ்க்கைத்துணை வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், அவருடைய இறப்பு வரை வாழ்நாள் முழுவதும் ஆண்டளிப்பின் அதே தொகையை தொடர்ந்து பெறுவார்.
    - இறுதி எஞ்சுநரின் இறப்பு பேரில் கொள்முதல் விலை நியமனதாரருக்கு / சட்டபூர்வ வாரிசுதாரருக்கு அளிக்கத்தக்கதாகும்.
    - முதன்மை ஆண்டளிப்பு பெறுபவரின் வாழ்க்கைத்துணை முன்பே இறந்திருந்தால், அப்போது முதன்மை ஆண்டளிப்பு பெறுபவரின் இறப்பு பேரில், கொள்முதல் விலை நியமனதாரருக்கு / சட்டபூர்வ வாரிசுதாரருக்கு அளிக்கத்தக்கதாகும்.

**குறிப்பு :** இந்த பாலிசியின் கீழ் பலன்களை பாதுகாக்க, பிரீமியம் தொகை ஆண்டளிப்பு ஒப்பந்தம் வழங்கும்போது / மறுபடி வாங்கும்போது பொருந்தும் வரிகள் நீங்கலாக ஆகும்.

**கொள்முதல் விலை என்பது இந்த பாலிசியின் கீழ் பிரீமியம் (பொருந்தும் வரிகள், இதர சட்டரீதியான வரிகள் இருப்பின் தவிர்த்து) ஆகும். கொள்முதல் விலை மற்றும் பிரீமியம் என்ற சொல் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## மாதிரி ஆண்டளிப்பு நன்மைகள் விளக்கம்

**வருடாந்திர ஆண்டளிப்பு பட்டுவாடா தொகை @ வயது - 60 ஆண்டுகள் கொள்முதல் விலை ₹10 லட்சத்திற்காக (பொருந்தும் வரிகள் நீங்கலாக)**

| ஆண்டளிப்பு விருப்பத்தேர்வு | வருடாந்திர ஆண்டளிப்பு தொகை | ஆண்டளிப்பு தொகை கொள்முதல் விலையின் ஒரு %ஆக | இறப்புப் பலன் |
|---|---|---|---|
| கொள்முதல் விலையின் வருவாய் 100%-ன் வருவாய் கொண்டு வாழ்நாள் ஆண்டளிப்பு (ஆர்ஓபீ) | ₹ 54,148 | 5.41 | ₹ 10,00,000 |
| இறுதி எஞ்சுநர் இறப்பு பேரில் கொள்முதல் விலையின் வருவாய் 100%-ன் வருவாய் கொண்டு கூட்டு ஆயுள் இறுதி எஞ்சுநர் ஆண்டளிப்பு (ஆர்ஓபீ) | ₹ 53,481 | 5.35 | ₹ 10,00,000 |

*கூட்டு ஆயுளுக்காக ஒரே வயது இரண்டு ஆண்டளிப்பு பெறுபவர்களுக்காகவும் கருதப்படுகிறது.

## ரிபேட்ஸ் அளிக்கத் தடை

**காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டபடி, எடுத்துரைப்பது :**

a) இந்தியாவில் உயிர் அல்லது சொத்து சம்பந்தமான ஒரு புதிய காப்பீடு அல்லது காப்பீட்டைப் புதுப்பித்தல் அல்லது தொடரச் செய்வதை ஊக்குவிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒருவருக்குக் கொடுக்கப்படும் கமிஷனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியை பாலிசி மீது கட்டப்படும் பிரீமியத்தில் ஒரு தள்ளுபடியாக அளிக்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் மற்றும் வெளியிடப்பட்டுள்ள பாலிசி அம்சங்கள் அல்லது காப்பீட்டாளரின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் தள்ளுபடிகள் தவிர பாலிசி எடுக்க, புதுப்பிக்க அல்லது தொடர ஊக்குவிக்கும் முறையில் எந்த தள்ளுபடியும் வழங்க அல்லது ஏற்றுக்கொள்ள அனுமதி இல்லை.

b) இந்த பிரிவின் விதிகளின் கீழ் நிறைவேற்றுவதில் எவரும் தவறு செய்திருப்பின் அபராதத்திற்கு உரியவர் ஆவார், அது பத்து லட்சம் ரூபாய் வரை இருக்கப்பெறலாம்.